**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா.4** **Date : 15.11.2023**

| | |
|---|---|
| **Name : லோகேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 –3 present. )**

சாட்சி ஆஜர். மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்பஅழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) வினுபிரியா எனது தங்கை என்றால் சரிதான். வழக்கு குறித்து நேரடியாக தெரியாது என்றும், தங்கை சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 10.02.2023–ம் தேதி விசாரித்தனர். பொதுவாக போட்டோ மாற்றும் தொலைநுட்பம் வந்துவிட்டது என்றால் ஆமாம்.

2) இந்த வழக்கிற்காக நான் எத்தனை முறை காவல் நிலையம் சென்றிருப்பேன் என்றால் 2– 3 முறை சென்றேன். வழக்கு குறித்து நேரடியாக தெரியாது என்றும், 1–ம் எதிரி, 2 வதாக திருமணம் செய்யவில்லை என்றும், அ.சா.1 எனது தங்கை என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டூர்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா.11** **Date : 15.11.2023**

| | |
|---|---|
| **Name : கோகுல்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 – 3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் குக்கல்பட்டியில் குடியிருந்து IT யில் சென்னையில் வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 க்கும், 1–ம் எதிரிக்கும் கடந்த 2017–ம் வருடம் திருமணம் நடந்தது. அவர்கள் இருவருக்கும் ஆண்1 பெண் 1 என்று இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

2) 1–ம் எதிரி கோயம்புத்தூரில் காவல் துறையில் ஐஜி ஆபில் வேலை செய்து கொண்டிருந்தார். கடந்த 2022–ம் வருடத்தில் அ.சா.1 என்னிடம் தனது கணவர் 2 வதாக நித்யா என்ற பெண்ணை திருமணம் செய்ததாக என்னிடம் சொன்னார். அதன் பின்னிட்டு, 1–ம் எதிரி சேலத்தில் ஆயுத படை பிரிவில் வேலை செய்தபோது, அ.சா.1 க்கும் 1–ம் எதிரிக்கும் இடையே 2 வது திருமணம் செய்ததது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது.

3) அ.சா.1 தனது கணவரின் செல்போன் மூலமாக 2 வது திருமணம் நடந்த விவரத்தை தெரிந்த கொண்டதாகவும், அவர்கள் இருவருக்கும் ஒரு ஆண் குழந்தை உள்ளதாகவும் தெரிந்துகொண்டேன். 1–ம் எதிரி அ.சா.1 ஐ இது சம்மந்தமாக கொலை மிரட்டல் விடுத்தாக தெரிந்துகொண்டேன். அ.சா.1 இது

சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) அ.சா.1 எனது மாமா மகள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2 வது திருமணம் செய்து கொண்டாக சொல்லிப்படும் தேதி, மற்றும் இதர விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தனர் 05.02.2023–ம் தேதி விசாரித்தார்கள். வழக்கு குறித்து நேரடியாக தெரியாது என்றும், 1–ம் எதிரி, 2 வதாக திருமணம் செய்யவில்லை என்றும், அ.சா.1 எனது உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**